**SPLCC.No.19/2025.**

**PW-17 :** திரு.ரஜினிகாந்த்**.**

நாள் : 21.08.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**
**எதிரிகள் ஆஜர்.**
**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அந்த உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், நான் தாக்கல் செய்யவில்லை. புலன் விசாரணை இடையில் நான் மாறுதலாகி சென்றுவிட்டேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு Preliminary Enquiry செய்ய வேண்டும் என்றால், பூர்வாங்க விசாரணை செய்ய வேண்டும். நான் வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் 2011ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2014ம் ஆகஸ்ட் வரை காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். எங்களை வழிநடத்துவதற்காக DIRECTORATE OF VIGILANCE AND ANTI–CORRUPTION manual உள்ளது என்றால், சரிதான். அதன் அடிப்படையில் நாங்கள் விசாரிக்க வேண்டும் என்றால், சரிதான். இந்த manual கு.வி.மு.ச அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்றால், எல்லா சட்டங்களையும் ஆய்வு செய்து இந்த manual உருவாக்கப்பட்டது. அதன்படி ஒரு மனு வந்தால் அதனை எண்ணிட்டு தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றால், சரிதான். அந்த மனுவின் தன்மையை பொறுத்து Preliminary Enquiry செய்ய வேண்டுமா அல்லது Detailed Enquiry செய்ய வேண்டுமா அல்லது பொறி வைப்பு

நடவடிக்கை எடுக்க வேண்டுமா என உத்தரவிடுவார்கள் என்றால், சரிதான். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு எங்களுடைய மேல் அதிகாரிகளுக்கு எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றால், அது சரியல்ல. இந்த வழக்கில் மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்து, Vigilance Commissioner Letter No. 5499/VC–1/09–1, dated 22.09.2009 and DE101/09/AGRI/SIC அதன்படியும் மேலும், Vigilance Commissioner Letter No.5596/VC–1/2011–1, dated 05.12.2011 அதன்படியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இந்த உத்தரவு விவரங்களை இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். இந்த உத்தரவுகளை இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், எனக்கு தெரியாது. ஆனால், நான் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் எந்தவித Preliminary Enquiryயோ, Detailed Enquiryயோ நடக்கவில்லை என்றால், சரியல்ல. இதை Detailed Enquiry 101/09/AGRI/SIC படி சென்னையில் விசாரணை செய்து, பின்னர் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கு முறைப்படி வழக்கு பதிவு செய்ய பரிந்துரை செய்யப்பட்டது. மேலும், Detailed Enquiry, Preliminary Enquiry and Vigilance Report ஆகியவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பது கிடையாது. மேற்படி Reportகள் Confidential Report என்பதால் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பது கிடையாது. Preliminary Enquiryயை விசாரணை செய்த அதிகாரியை சாட்சியாக விஜிலன்ஸ் வழக்கிலும் விசாரிக்க வேண்டும் என்றால், அது சரியல்ல. நான் சொல்வது போல் Detailed Enquiry, Preliminary Enquiry எதுவும் நடக்கவில்லை என்றால், அது தவறு. அ.சா.ஆ.17 எந்த தகவலின் பேரில் பதிவு செய்யப்பட்டது

என்றால், Vigilance Commissioner Letter No.5596/VC-1/2011-1, dated 05.12.2011 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அ.சா.ஆ.17ல் 4வது காலத்தில் நம்பத்தகுந்த தகவலின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். 05.12.2011 தேதியில் எனக்கு தகவல் கிடைத்திருந்தால் அன்றைய தினமே நான் வழக்கு பதிவு செய்திருக்க வேண்டும் என்றால், சரியல்ல. எனக்கு கடிதம் கிடைத்த 24.02.2012 தேதியில் வழக்கு பதிவு செய்தேன். அந்த கடிதம் எனக்கு 24.02.2012ல்தான் கிடைக்கப்பெற்றது என்று எந்த குறிப்பும் அ.சா.ஆ.17ல் இல்லை என்றால், சரிதான். 2007-2008 ஆண்டில் சம்பவம் நடந்ததாக அ.சா.ஆ.17ல் உள்ளது. 24.02.2012ல்தான் காலதாமதமாக தகவல் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால், சரியல்ல. அ.சா.ஆ.17ல் 8வது காலத்தில் Reason for delay ஆக எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. விஜிலன்ஸ் வழக்குகளில் Vigilance Report அதைத்தொடர்ந்து D.E விசாரணை முடித்து அரசாங்கத்திற்கு சென்று வழிவழியாக உத்தரவு வந்து சேருவதற்கு காலதாமதம் ஏற்படும். இந்த விவரத்தை 8வது காலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் சொல்வது போல் எந்த விவரங்களும் நடக்காததால்தான் அதனை அ.சா.ஆ.17ல் 8வது காலத்தில் சொல்லவில்லை என்றால், அது தவறு. இந்த வழக்கில் நான்தான் புகார் கொடுத்தவர் என்றால், சரிதான். புகார் கொடுத்த நபரே இயற்கை நீதிப்படி புலன் விசாரணை செய்யக்கூடாது என்றால், அது சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தால் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். அ.சா.ஆ.17 ஆனது 24.02.2012ல் பதிவு செய்யப்பட்டு 14.07.2021ல் தான்

நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். 9 வருட காலதாமதமாக அ.சா.ஆ.17 நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால், சரிதான். இந்த வழக்கில் ஒரு பகுதி விசாரணை நான் செய்தேன். இந்த வழக்கில் பெரும்பான்மையான விசாரணையை நான் தான் செய்தேன் என்றால், அது தவறு. இந்த வழக்கில் என்னை பொறுத்த வரையில் நான் மட்டும்தான் தனியாக விசாரணை அதிகாரி என்ற முறையில் விசாரணை செய்தேன். நான் வேளாண்மை பொறியியல் துறையில் வழக்கு ஆவணங்களை பெற்றேன் என்றால், கடிதம் கொடுத்து ஆவணங்களை பெற்றேன். இந்த விவரத்தை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். ஆவணங்களை எப்படி பெற வேண்டும் என்று Vigilance Manual பிரிவு 59ல் சொல்லப்பட்டுள்ளது என்றால், கைப்பற்றுதல் பற்றி தான் அதில் சொல்லப்பட்டுள்ளது. நான் வேளாண்மை பொறியியல் துறையில் வழக்கு ஆவணங்களை பெற்றேன் என்றால், கடிதம் கொடுத்து ஆவணங்களை பெற்றேன் என்று காண்பிக்க எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், நான் கொடுக்கவில்லை. எனக்கு பின்பு புலன் விசாரணை செய்த அதிகாரி கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. நான் எந்த அதிகாரியை, எந்த தேதியில் எந்த அலுவலகத்தில் சந்தித்து கடிதம் கொடுத்து ஆவணங்களை பெற்றேன் என்றால், அதிகாரியின் பெயர், தேதி எனக்கு நினைவில்லை. ஆனால், வாலாஜா, பொறியியல் வேளாண்மைத்துறை அலுவலகத்தில் அதிகாரியை சந்தித்து ஆவணங்களை பெற்றேன். என்னிடம் ஆவணங்களை கொடுத்து அதிகாரியை விசாரித்து வாக்குமூலம் நான் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். நான் எந்த

அதிகாரியை எந்த தேதியில் சந்தித்து ஆவணங்களை பெற்றேன் என்ற விவரம் வழக்கு நாட்குறிப்பில் உள்ளதா என்றால், உள்ளது. அந்த வழக்கு நாட்குறிப்பு 4 Volumeயை கொண்டது. தற்போது அந்த முழு வழக்கு நாட்குறிப்பு என்னிடம் இல்லை. வழக்கு நாட்குறிப்பு முழுவதையும் நீதிமமன்றத்திற்கு எடுத்து வந்து சாட்சியம் அளிக்க வேண்டும் என்றால், எனக்கு தேவையான வழக்கு நாட்குறிப்பு ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். அவ்வாறு வழக்கு நாட்குறிப்பில் ஆவணங்களை அளித்த அதிகாரியின் விவரம், தேதி நான் குறிப்பிட்டு இருந்தால் அதனை பின்னிட்டு புலன் விசாரணை செய்த அதிகாரி பார்வையிட்டு ஆவணங்களை அளித்த அதிகாரியை விசாரித்து, வாக்குமூலம் பெற்றியிருப்பார் என்றால், அது சரியல்ல. நான் வழக்கு நாட்குறிப்பில் ஆவணங்களை அளித்த அதிகாரியின் விவரம், தேதி குறிப்பிட்டுள்ளதாக நான் சொல்வது பொய் என்றால், அது சரியல்ல.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் கு.வி இத்துடன் நிறுத்தி, ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM Principal District Judge, Ranipet Digitally signed by M SELVAM DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet